**OS.No.244/2024, Dated 05.12.2024**

The witness sworn under Oaths Act 1969 on this the 05th day of December 2024

**வா.சா.1 - குப்பம்மாள் க/பெ கோபால் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்திற்கு வரி கட்டியுள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் இறந்து 16 வருடங்கள் ஆகிறது. எனது தாயார் கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார். அவருக்கு கேன்சருக்கான மருத்துவ சிகிச்சை பார்த்தோமா என்றால் இல்லை. அவர் சுயநினைவு இல்லாத போது அவரை நான் வந்தவாசியில் வைத்து பார்த்துகொண்டேன். அவரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. அவர் இறப்பதற்கு முன்பு 50 நாட்கள் செங்கல்பட்டு மருத்துவமனையில் இருந்தார் என்றால் இல்லை. அவருக்கு நான் மருத்துவம் பார்க்கவில்லை என்பதால் தான் எனக்கு எந்தவித விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு மருத்துவ சிகிச்சை எடுத்த விபரங்கள் எனக்கு தெரியாது. எனது தந்தையின் சுயார்ஜித சொத்துகள் என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மின்சார ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னை தவசி கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். எனக்கு திருமணம் ஆகி 36 வருடங்கள் ஆகிறது. சொத்து கிரையம் வாங்கப்பட்டபோது எனக்கு சுமார் 3 வயது இருக்கும். எனது பெரிய மகளுக்கு 32 வயது ஆகிறது. நான் தூசி கிராமத்தில் எனது வீட்டில் வசித்து வருகிறேன். தூசி கிராமத்தில் உள்ள வீடு சின்னப்பா பிள்ளை வாங்கி கொடுத்தது என்றால் இல்லை. அது எனது மாமனார் வகையில் வந்த சொத்தாகும். நான் பிராதில் குறிப்பிட்டுள்ளபடி எனது தகப்பனார் கடன் கொடுக்கும் தொழில் செய்தார் என்றால் இல்லை. எனது தகப்பனாருக்கு ஆடு மேய்பது தான் தொழில் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தான் உடனிருந்தார் என்றால் இல்லை. தூசியில் உள்ள வீட்டிலும் 1ம் பிரதிவாதிக்கு சரிபாகம் உள்ளது என்றால் இல்லை. அது எனது மாமனார் வழி சொத்தாகும். எனது தகப்பனார் இடம் வாங்கி அவர் தான் வீடு கட்டினார் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதன் விபரங்கள் எனக்கு தெரியாது. எனது கணவர் பயிர் வேலை செய்கிறார். எனக்கு தவசியில் நிலம் உள்ளது. தவசியல் உள்ள நிலங்களும் 1ம் பிரதிவாதி வாங்கி கொடுத்ததால் அதிலும் 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என்றால் இல்லை. எனது தாத்தாவின் பெயர் அப்பாவு பிள்ளை அவரை நான் பார்த்ததில்லை. எனது தாத்தா இருந்த இடத்தில் தான் எனது தகப்பனார் வீடு கட்டியுள்ளார். 2ம் பிரதிவாதிக்கு இருதய நோய் இருந்தது அவருக்கு மருத்துவம் பார்த்தேனா என்றால் இல்லை. அவருக்கு திருமணம் செய்து

வைக்க நான் முயற்சி செய்யவில்லை. அவரது இறப்பிற்கும் நான் வரவில்லை என்றால் அவர் இறந்த தகவலை எனக்கு சொல்லவில்லை. எனவே, தாவா வீட்டிலேயே நான் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் மரணத்திற்கு வரவில்லை என்றால் என்னிடம் தகவல் சொல்லவில்லை. அவர் இறப்பதற்கு முன்பு அவருக்கு வாகன விபத்து ஏற்பட்டு படுத்தபடுக்கையாக இருந்தார் என்றால் சரிதான். அப்போது நான் பார்த்தேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் தூசியில் உள்ள வீட்டை என்னை வைத்துக்கொள்ளும்படியும் தவசியில் நிலங்களில் 1ம் பிரதிவாதிக்கு மட்டும் பாகம் உள்ளதாகவும் தாவா சொத்தை பிரதிவாதிகள் அடையவேண்டும என்று கூறியதால் தான் நான் அவரது மரணத்திற்கும் வரவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நான் வாங்கியுள்ளேனா என்றல் வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன். 1ம் பிரதிவாதி வீடு கட்டும்போது நான் ஆட்சேபிக்கவில்லை. அந்த வீட்டின் மீது கடன் வாங்கப்பட்டு கடன் அடைக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் கடனே வாங்கவில்லை. அவரது மருத்துவ செலவிற்காக கடன் வாங்கப்பட்டது என்றால் இல்லை. எனது சகோதரியின் மருத்துவ செலவிற்காகவும் கடன் வாங்கப்பட்டது என்றால் இல்லை. தாவா சொத்து பிரதிவாதிக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றால் இல்லை. தூசியில் உள்ள சொத்தில் பிரதிவாதிகளுக்கும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கும் சகோதரிக்கும் எவ்வித மருத்துவ சிகிச்சை செய்யவில்லை என்பதால் எனக்கு பாகம கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல. தூசியில் உள்ள சொத்து விபரத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தகக்கது என்றால் சரியல்ல. எனவே தாவா பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.